361

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**சட்டக்கற்கைகள் துறை**

**சட்ட பட்டமாணி நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் - 06**

**தொடர் மதிப்பீட்டு பரீட்சை 02 - 2022/2023**

**LLU6813– சட்டவியல்**

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

**திகதி:- 02.12.2023** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30**

கீழே தரப்பட்ட வினாவுக்கு விடையளிக்குக.

20 புள்ளிகள் வழங்கப்படும்.

தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. “ஆன்மீக தூய்மை” என்ற ஒரு ஆலயம் செரண்டிப் அரசின் கீர் என்ற மலையில் அமைந்துள்ளது. மதம் சார்ந்த இடமாகிய இவ்வாலயம் ஒரு சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. பிரதம குருக்கள், பக்தர்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் பாரம்பரியங்களையும் தீர்மானிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார். சபை, அனைத்து அத்தியாவசியமான மதம் சார்ந்த நடைமுறைகள் தொடர்ந்து பின்பற்றுவதை உறுதிப்படுத்தும். இந்த நடைமுறைகள் 10 வயது தொடக்கம் 50 வயதிற்கு உட்பட்ட பெண்கள் ஆலயத்திற்குள் பிரவேசிப்பதை தடுக்கின்ற நடைமுறையையும் உள்ளடக்குகின்றது. ஆன்மீக தூய்மை ஆலயத்தில் பக்தர்கள் இந்த மட்டுப்பாடு பலவருடங்களாக பின்பற்றப்பட்டு வருவதால் இது அத்தியாவசிய நடைமுறை எனவும் ஏதேனும் மீறல் ஏற்பட்டால் அது பக்தர்களுடைய ஆன்மீக வளர்ச்சியையும் ஆலயத்தின் தூய்மையையும் பாதிக்கும் என நம்புகின்றனர்.

   இந்த நடைமுறையின் அடிப்படையில் செரண்டிப் பாராளுமன்றம் ஆன்மீக தூய்மை ஆலய சட்டமூலத்தினை (அதிகாரமளிக்கும் சட்டமூலம்) 2023 இல் பிரேரணை செய்தது. இந்த சட்டமூலம் 10 வயது தொடக்கம் 50 வயதிற்குட்பட்ட பெண்கள் ஆலயத்திற்குள் உட்பிரவேசிப்பதை தடுக்கின்றது. சட்டமூலத்தின் பாயிரத்தின் பிரகாரம் ஆன்மீக தூய்மை ஆலயத்தின் பல நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த மத நடைமுறைகளை அங்கீகரிப்பதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

   செரண்டிப் உடைய இளம் சட்டத்தரணிகளின் அமைப்பு இந்த சட்டத்தை உயர்நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தியதுடன் எந்த வித மட்டுப்பாடும் இன்றி ஆன்மீக தூய்மை ஆலயத்தினுள் பெண்கள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரியது. குறிப்பிட்ட சட்டமூலம் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் அரசியலமைப்பு பால் அடிப்படையிலான பாரபட்சத்தை தடுக்கின்றது எனவும் வாதிட்டனர். “சுதந்திரம்” என அழைக்கப்படும் பெண்கள் மேம்பாட்டுக்குழு இச்சட்டமூலம் பெண் பக்தர்களின் உரிமைகளை பாதிப்பதாக வாதிடுகின்றனர்.

   முரண்படுகின்ற அக்கறைகளுக்கிடையில் சமநிலையை பேணுகின்ற சமூகவியல் சட்டச் சிந்தனைபிரிவுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட சூழ்நிலையை பகுப்பாய்வு செய்க.

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -